REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 14௳ வியாழன் (29 12 55) ★ ★ வெளியீடு: மார்கழி 15௳ வெள்ளி (30—12—55) [இதழ் 169

மொட்டையடித்துக்கொள்வோருக்குப் பரிசு

ராஜ்கோட், டிச. 28—

நகரத்தில் இருந்து வந்துள்ள ஒருவர், யார் தங்கள் தலையை வழுக்கையாக மொட்டையடித்துக்கொள்ளுகிறார்களோ அவர்களுக்கு, அவர்களது அந்தத் துணிச்சலான செய்கைக்குப் பரிசாக ரூ 1—4—0 தரப்படுமென்று கூறினதாக சவுவா சனும் நகரை அடுத்த கிராமம் ஒன்றில் 'செய்தி' ஒன்று பரவிற்று.

அப்பாவி கிராம மக்கள் 'பரிசு'க்கு ஆசைப்பட்டுத் தங்கள் தலைகளை பழுங்க மொட்டையடித்துக்கொண்டனர். ஆனால், இன்னும் அவர்கள் தங்களுக்குப் பரிசு தருவதாகக் கூறிய மனிதனைத் தேடி அலைகிறார்களாம்! ஏமாற்றப்பட்டுவிட்ட அவர்கள் வெட்கத்தால் வேதனைப்படுகின்றனராம்!

புதிய திட்டங்களுக்கோ குறைவில்லை!

விஞ்ஞானிகளை விரட்டுவதிலும் பஞ்சமில்லை

'உறுதி செய்யப்பட்ட விஞ்ஞான வழிகளை அரசியல்வாதிகள் ஏற்கார்'

'தம் விருப்பு-வெறுப்புக்கே முதலிடம் தருவர்'

விஞ்ஞானப் பேராசிரியர் மேகநாத் ஷா அவர்களின் கண்டனமும்-கருத்தும்

லக்னோ, டிச. 26—

"பொதுவாக இந்தியாவும், அதிலும் குறிப்பாக உத்திரப் பிரதேசமும் குறுகிய காலத்தில் முழு அளவில் தொழில் மயமாக்கப்பட்டு, அதன் விளைவாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கான சூழ்நிலை உருவாக, விஞ்ஞானிகள் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும்."

இக்கருத்தை உத்திரப் பிரதேச முதலமைச்சர் சம்பூர்ணனந்த் அவர்கள், தேசீய விஞ்ஞானக் கழகத்தின் வெள்ளி விழாவில் பேசுகையில் வலியுறுத்தியுள்ளார்.

* * *

"ஏதாவது ஒரு வினையை அரசியல்வாதிகள் மேற்கொண்டால் அதை அரசியல்வாதியின் சொந்த வழியிலேயேதான் செய்து முடிப்பர்—அதாவது, அதிகாரத்தைத் தங்கள் கையிலேயே வைத்துக்கொண்டு, ஒப்புக்கொள்ளப்பட்ட விஞ்ஞான வழியைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, தங்கள் விருப்பு - வெறுப்புக்கே முக்கியத்துவம் கொடுத்து, அரசியல்வாதிகள் அவ்வினையைச் செய்து முடிக்க முந்துவர்."

"எவ்வளவு தவறுடையதாக இருந்தபோதிலும், ஆளவந்தார்களின் முடிவுகளை எதிர்க்கும் துணிவு, அல்லது அதிகாரம் பெற்றுள்ள விஞ்ஞானிகளைக் கொண்டுள்ள நாடு மிகச் சிலவே ஆகும்; இருந்தாலும், தங்களிடமுள்ள அதிகாரத்தைத் தவறான வழியில் செலவிட்டபொழுது, விஞ்ஞானிகள் எதிர்த்துள்ள வரலாற்றுச் சம்பவங்களும் உள்ளன. சில நாடுகளில், விஞ்ஞானக் கழகங்கள் வெறும் வாதமிடும் கழகங்களாகவும் உள்ளன. வேறு சில நாடுகளில், விஞ்ஞானிகள் பேரதிகாரம் பெற்றும் உள்ளனர். வேறு சிலவற்றில், இரண்டு எல்லைகளுக்குமிடையில் விஞ்ஞானிகள் செயல்பட்டும் வருகின்றனர்."

"புரட்சிக் காலந்தொட்டு ரஷ்ய விஞ்ஞானக் கழகங்கள் விரிவான அதிகாரம் பெற்று விளங்குகின்றன. அத்தகைய அதிகாரம் பெற்று விளங்கும் விஞ்ஞானக் கழகங்கள் உலகில் வேறு எங்கும் கிடையாது. இதன் விளைவாகத்தான் அணு விஞ்ஞானத்தில் ரஷ்யா பன்மடங்கு முன்னேறி இருக்கிறது."

"இந்தியாவில் விஞ்ஞானக் கழகங்கள் வெறும் விவாத மன்றங்களாகவே இருந்துவருகின்றன. தேசிய இரசாயனச் சாலைகளின் நிர்வாகம் பற்றியோ, இதர அரசாங்க விஞ்ஞான ஏற்பாடுகள் பற்றியோ இங்குள்ள விஞ்ஞானக் கழகங்களின் கருத்து அறியப்படுவதே கிடையாது"

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க.)

உடல் பருத்தவர் சிறுக்க அதிசய மருந்து!

அரை மணி நேரத்தில் காலியானதாம்

ஸ்டாக்ஹோம், டிச. 27—

'பருத்து உப்பிப் போயிருக்கும் உடலைக் குறைப்பதற்கு ஆச்சரியமான பலன் தரத்தக்கது' என்ற பெரும் விளம்பரத்துடன் மருந்து ஒன்று சுவீடன் தேசத்துக் கடைகளில் விற்பனை துவங்கப்பட்டது.

விற்பனை துவங்கிய சிறிது நேரத்திற்குள் அரை மணி நேரத்திற்குள்- இந்த மருந்துப் புட்டி ஒன்றுகூட இல்லாது விற்பனை ஆகிவிட்டதாம்.

பருத்த உடல் கொண்ட ஆண்களும், பெண்களும் போட்டிபோட்டுக்கொண்டு, முண்டியடித்து மருந்துப் புட்டியை வாங்கியபோது, சில இடங்களில் கலகம்கூட வந்துவிடும் போலிருந்ததாம்.

நார்வே கடற்கரை ஓரத்தில் கிடைக்கும் செடி ஒன்றிலிருந்து இறக்கப்படும் இரசாயனப் பொருளுடன், 'ஹைட்ரோகுளோரிக்' அமிலத்துடன் சேர்த்துத் தயாரிக்கப்படும் இம்மருந்து, பசியைத் தடுத்து, குறைத்து, பருத்த உருவம் சிறுக்க உதவி புரிகிறதாம்.

இந்த மருந்தைப் பரிசோதித்த மருத்துவ நிபுணர்கள், 'இது தீங்கற்றதும் உபயோககரமானதும்' என்று கூறியுள்ளனராம்!

பாங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம்?

இந்தியா முழுவதும் நடைபெறும்?

டில்லி அதிகாரிகள் கவலை

ஆக்ராவில் நடைபெற்ற அ. இ. பாங்கி ஊழியர் சங்க மத்தியக் குழு, ஊதியக் குறைப்பை எதிர்க்கும் முறையில் ஜன 6, 7-ந் தேதிகளில் பாங்கிச் சிப்பந்திகள் பொது வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளது.

'குழுவின் இந்த முடிவு சட்ட விரோதமானது' என்று டில்லி சர்க்கார் வட்டாரம் கண்டிக்கிறதாம். தங்கள் கவலை மட்டுமின்றி நாட்டின் பல தொழில்களையும் பாதிக்கக்கூடிய ஒரு 'முறை'யைப் பின்பற்றும் யோசனையை பாங்கி சிப்பந்திகள் கைவிட்டுவிடுவர் என தாங்கள் நம்புவதாகவும் அவர்கள் சொன்னார்களாம்.

இதற்கிடையில்தான், நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பாங்கிகளின் சிப்பந்திகள், 28-ந் தேதியன்று, ஊதியக் குறைப்பை எதிர்த்து, 1 மணி நேரம் 'அடையாள வேலை நிறுத்த'த்தை மேற்கொண்டனர்.

'நிர்வாக கட்டளைகளை சட்ட சபை ஒப்புதலுக்குள்ளாக்குக'

'அறமன்றங்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தக்கூடாது'

'அரசியல் சட்டத்தை அடிக்கடி திருத்துவது மக்களாட்சி முறையை மாய்த்துவிடும்'

பம்பாய் வழக்கறிஞர் மாநாட்டினர் கண்டனம்

தார்வார், டிச. 25—

"அரசாங்க நிர்வாக அமைப்பு தினம்தினம் பிறப்பிக்கும் கட்டளைகளை சட்ட அமைப்பின் ஒப்புதலுக்கு உள்ளாக்க வேண்டும்."

"பொதுமக்களின் உரிமைகளைப் பாதிக்கும் வகையில் மேற்படி உத்தரவுகள் எதேச்சாதிகாரமுடையதாக உள்ளன; இப்போக்கு சட்ட முறை ஆட்சிக்கு ஒத்த ஒன்றாக இல்லை."

"மக்களின் பொதுநலன்களையும், குடிவாழ் உரிமைகளையும்பற்றி அறமன்றங்களுக்குள்ள அதிகார வரம்பைக் குறைத்துவிடும் தன்மையில், சட்டசபைகளின் ஆர்வம் வளர்ந்துவருவது கண்டிக்கத்தக்கதாகும்."

"அரசியல் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கும், சொத்துரிமைக்குப் தீங்கிழைக்கும் தன்மையில், அடிக்கடி அரசியல் சட்டத்தைத் திருத்துவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்."

மேற்குறித்தக் கருத்துடைய தீர்மானங்களை, பம்பாய் வழக்கறிஞர் மாநாட்டினர் நிறைவேற்றியுள்ளனர்.

மாநாட்டிற்குத் தலைமை வகித்த புருஷோத்தம திரிகம்தாஸ், 'பொது வாழ்விலிருந்து வழக்கறிஞர்கள் மறைக்கப்பட்டு விடுவார்களானால் மக்களாட்சி நீண்ட காலம் உயிர் வாழாது' எனவும், 'சட்டங்களை எளிதாக்கவும், ஜனநாயக சமுதாயத்தை வளர்த்துப் பாதுகாத்துவர வழக்காடும் நடைமுறைகளை இலகுவாக்கவும் வழக்கறிஞர்கள் முயலவேண்டும்,' எனவும் கருத்தறிவித்தார்.

'அடிக்கடி அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வது ஜனநாயக வளர்ச்சிக்கு ஊறு தேடுவதாகும்' என வரவேற்புக் கழகத் தலைவர் குறிப்பிட்டார்.

பண்டிதரின் பவனிக்காக!

அண்மையில் பிரதமர் நேரு அவர்களது கேரள சுற்றுப் பயணத்தின்போது, கேரளம் நோக்கிக் கோவையிலிருந்து செல்லுகையில், குனியமுத்தூர் வழியே சென்றாக வேண்டியிருந்தது.

இவ்வூரின் முக்கியப் பாதையின் இருபுறங்களிலும் குடியிருந்துவரும் தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகள் அவர் கண்களில் தென்படக்கூடாது என்பதற்காக, அக்குடிசைகளை, அரசாங்க ஆணைபாட்கள் பிய்த்தெறிந்துவிட்டனராம்.

இத்தகவலை, குனியமுத்தூர் தி. மு. கழகச் செயலாளர் தெரிவித்துள்ளதுடன், குடிசைகளை இழந்து வாடும் அம்மக்களுக்குக் கழகச் சார்பில் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறார்.

பொறி இயல்துறையில் புரட்சியான மாறுதல்!

அணுசக்தி விமானம் நிர்மாணிக்க முயற்சி

அணுவாற்றலால் பொறி இயல் துறையில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன.

அணுவாற்றலால் இயக்கக்கூடிய விமானத்தைக் கட்டுவதற்குச் சோதனைக் கூடம் அமைப்பது பற்றி பிரிட்டன் நிறுவனமொன்று சிந்தித்து வருகிறது.

விமானம் அமைக்குமுன், இரசாயன, உலோகப் பொருள்கள் ஆராய்ச்சி நடத்துவது அவசியமாகும். எஞ்சின் அமைப்புமுறை, உபயோகிக்கும் உலோகம் இவை பற்றிச் சோதனைகள் நடத்த வேண்டும்.

பச்சைத் தமிழன் ஆட்சியில் தொழிலாளர்கள் 'பட்டினிப் போர்'

குஜராத்தி முதலாளியின் அக்கிரமத்திற்கெதிராக நடவடிக்கை

இரண்டாம் நாள் மறியலில் 13 பேர் கைது

சென்னை, டிச. 28—

'பச்சைத் தமிழன்' ஆட்சியில், தொழிலாளர்கள், தங்களது நியாயமான கோரிக்கைகளை ஈடேற்றிக் கொள்வதற்காக—குஜராத்தி முதலாளியின் சட்ட விரோதமான செயலுக்குப் பரிகாரம் தேடுவதற்காக—175 குடும்பங்கள் பட்டினியால் செத்துமடிவதைத் தடுப்பதற்காகப் பட்டினிப் போர் நடத்துகிறார்கள்—சென்னை நகரில்!

(4-ம் பக்கம் பார்க்க)

தொழிலாளர் நலன்களைக் கவனிக்கும் நிலையம்

தொழிலாளர்களின் நலன்களைக் கவனிக்கவும், தொழிற்சாலைப் பாதுகாப்பு வசதிகளைக் கண்காணிக்கவும் பம்பாயில் ஓர் தொழிலாளர் நல—பாதுகாப்பு விடுதியை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 29—12—'55 வியாழன்

பட்டாபியின் போதனை

மத்தியப்பிரதேசக்கவர்னராக இருக்கும் டாக்டர் பட்டாபி சிதாராமையா அவர்கள், உச்மானியா பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசும்பொழுது, ஜாதி அடையாளப் பெயர்களை விட்டொழிக்க வேண்டுமென கருத்து அறிவித்துள்ளார். மிக மிகக் காலந்தாழ்த்தியே, இக்கருத்து அவர் வாயிலிருந்து வெளியாகி இருக்கிறது என்றாலும், கருத்தில் தொக்கி இருக்கும் முற்போக்குக் கருதி, சென்ற காலத்தில் அவர் செய்யத் தவறியதை நாம் ஒரு பொருட்டாக மதிக்கப் போவதில்லை.

இந்து மதக் கலாச்சாரத்தின் பெருமை குறித்தும், ஆரியப் பண்பாட்டின் தொன்மையும் உயர்வும் குறித்தும், டாக்டர் பட்டாபியின் இன மக்களும், அவர்களைப் பின்பற்றி வாழ்வில் சிறப்பிருப்பதாக நடித்துத் திரியும் சில குணக்கேடர்களும் எல்லாக் காலத்திலும் பன்னிப் பன்னிப் பேசி வருகிறார்கள். இந்த ஜாதிச் சனியனும், ஜாதிப் பெயர் குறிக்கும் அடைமொழிகளும் உயர்ந்த பண்பாட்டிலிருந்து உற்பத்தியானது ஏன் என்ற நியாயமான கேள்விக்கு, அவர்களால் இதுவரை விடைகூற முடியவில்லை. நேர்மையான வினாக்களுக்கு விடை கூறாது விழிக்கும் நிலையிலும்கூட, அவர்கள் கூற்றில் காணப்பெறும் முரண்பாடு குறித்துத் துளியும் சிந்திக்க முனையாது, வினவியவர்களை விதண்டாவாதிகள் என விளம்பாமலும் இருப்பது கிடையாது.

கிறித்துவம், இஸ்லாமிய மதக் கோட்பாடுகளைக் காட்டிலும், அம்மதங்களோடு தொடர்புகொண்ட மேல்நாட்டு பண்பாட்டைக் காட்டிலும், இந்துமதக் கோட்பாடும் ஆரியப் பண்பாடும் பல வகையிலும் சிறப்புடையது எனக் கூறிக்கொள்ளும் அவர்களுக்கு, அவ்விரு மதக்கோட்பாடுகளின் அமைப்பில் ஜாதி உயர்வு - தாழ்வு இடம் பெறாதது ஏன் என்பது பற்றி சிந்திக்கும் முனைப்பு ஏற்படக் காணோம். இங்குள்ள ஜாதியில் கீழ்-மேல் எனும் நினைப்பு செல்வத்தால் ஏற்பட்டதும் அல்ல. பிறப்பினால் ஏற்பட்டுள்ள— இறக்கும்வரை என்றென்றைக்கும் மாற்ற முடியாத அக்கிரம அலங்கோலமாகும் இங்குள்ள ஜாதி ஏற்பாடு.

இப்பிறப்பினால் பிறந்து வளர்ந்துவரும் இப்பெருங்கொடுமையை இஸ்லாம் மதம் அறியாது. கிறித்துவ மார்க்கத்துக்குத் தெரியாது.

பன்றியோடு சேர்ந்த கன்றும் கெட்டொழியும் என்ற முதுரைக்கொப்ப, ஆரிய கலாச்சாரம் கால்கொண்டுள்ள இப்பாரதத்தில் இறக்குமதியான கிறித்துவமும் இஸ்லாமும், இந்த ஜாதி பார்க்கும் சங்கடத்திற்கு இரையாகிவிட்டன. தங்களுடைய புனிதத்தையும் கறைப்படுத்திக் கொண்டன எனக் கூறுவது மிகையாகாது.

ஜாதிகளைக் குறிப்பிடும் பெயர்களை வெட்டித்தொலைக்க வேண்டும் எனப் போதிக்கக் கிளம்பியுள்ள பட்டாபியார், ஜாதிகள் ஒழிய வேண்டும் என எண்ணுகிறாரா அல்லது ஜாதியைக் காட்டும் பெயர்கள் மட்டும் விட்டுத் தொலைக்கப் பட்டால் போதுமெனக் கருதுகிறாரா என்பதும், அவர் பேச்சிலிருந்து ஒருவராலும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. 'ஜாதியில் ஒருவருக்கு நம்பிக்கை இருந்தாலும் இருந்து போகட்டும்—ஆனால், அவர் ஜாதிப் பெயரை மட்டும் தவிர்த்துவிட்டால் போதும்' என்ற கருத்தில் தான், பட்டாபியார், ஜாதிப் பெயர்களை விட்டொழிக்கச் சொல்லியிருக்கிறார் என்றே பலர் கொள்ளக்கூடும். அவர் பேச்சு அத்தகு பொருள்தான் கொடுக்கிறது என்ற வாதத்திற்குத் தக்க சான்று இல்லாமலும் இல்லை.

பத்திரங்கள் பதிவு செய்யப்படும் காலத்தில் ஜாதிப் பெயர்களைக் குறிப்பிட வேண்டியதில்லை என்று மக்கள் சபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தை, தம்முடைய ஜாதிக் குறி ஒழிப்புப் பேச்சுக்கு ஆதாரமாகக்காட்டியுள்ளார் பட்டாபி.

அம்மேற்கோளில் இருந்து, அறவே ஜாதியை ஒழித்துக் கட்டுவதற்காகவல்ல, ஜாதிப் பெயர்களைக் கூறிக் கொள்வதிலிருந்து ஒருவரைத் தடுப்பதற்கு மட்டுமேதான் பட்டாபி போதித்திருக்கிறார் என்றுதான் கொள்ள வேண்டியதாகிறது.

வெளிப்படையாக ஜாதியைக் குறிக்கும் பெயர்களை ஒருவர் விட்டுவிடுவது பாராட்டத்தக்கதேயானாலும், மனிதப் பண்பாடு வளர்ந்தோங்குவதற்கு, அது மட்டுமே போதுமானது என்று நம்மால் கருத முடியவில்லை. ஜாதிய எண்ணம் அறவே தொலைந்து, அதனால் உருவாகியுள்ள மனப்பாங்கு மாய்ந்து, அனைவரையும் சமம் எனக்கொண்டு, செயல்படும் மனப்போக்கு ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும். அத்தகு சூழ்நிலையில்தான், புதிய சமுதாயம் உருவாக முடியும்.

அதைவிடுத்து ஜாதிப் பெயர்களை மட்டும் விட்டொழியுங்கள் எனப் பட்டாபிபோல் போதிப்பது, பருவகாலத்தில் தோன்றி மறையும் வெறும் காளான் கருத்தென்பதே நமது மதிப்பீடாகும். எனவே, அவருடைய போதனை காலவேகத்தைக் காட்டும் அளவையே அல்லாது அவருடைய நெஞ்சை விளக்கிக் காட்டும் பளிங்கு அல்ல.

ஜாதிப் பாகுபாடு, உயர்வு—தாழ்வு பாராட்டல் தென்னாட்டில் மட்டுமே இல்லை; வடநாட்டிலும் இருக்கிறது என பட்டாபி குறிப்பிட்டிருக்கிறார். ஜாதிகளைக் குறிப்பிடும் பெயர்களில் சிலவற்றையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார். இதிலுள்ள ஒற்றுமையை ஒரு பொருட்டாக மதித்து, இந்திய கலாச்சாரம் ஒன்றேஒன்றுதான் என வாதிடக் கிளம்புவர் ஏக இந்தியா உன்மத்தர்கள்! இரு பகுதிகளிலும் வழங்கிவரும் ஜாதிப் பெயர்களின் மூலத்தை நுணுகி ஆராய்ந்தால், ஏக இந்தியா வாதம் சுக்குநூறாகிவிடுவதை ஏக இந்தியா வாதிகளே அறிந்துகொள்வர்.

சென்னை ஆரம்பக் கல்வித் திட்டம்

மாறுதல்கள் குறித்து மந்திரி விளக்கம்

சென்னை, டிச. 27—

ஆரம்பக் கல்வி விசாரணைக்குழு, இடைத்தரக் கல்வி விசாரணைக் குழு ஆகியவற்றின் அறிக்கைகள் சர்க்காரின் பரிசீலனையிலிருப்பதாகவும், அடுத்த ஆண்டு முதல் குழுவினரின் சிபாரிசுகள் சில அமுல் செய்யப்படும் என்றும் கல்வி மந்திரி சி. சுப்பிரமணியம் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்த மட்டில் 'ஷிப்டு' முறை எதிர்ப்பதற்குக் கூறப்படும் காரணங்களை நீக்கக் கூடியதாயும், ஏராளமானவர்களைப் பள்ளிக்கு ஈர்க்கக் கூடியதாயுமுள்ள கல்வி முறை ஒன்றை உருவாக்குவதற்கு சர்க்கார் திட்டமிடுவதாக அவர் கூறினார்.

ஆரியரும்-திராவிடரும் கலந்துவிட்டனராம்!

கன்னட எழுத்தாளர் கூற்று

ரெய்ச்சூர், டிச. 26—

"சவமொழி (சமஸ்கிருதம்) ஒரு ஆரிய மொழி; கன்னடமோ திராவிட மொழி; எனவே, சவமொழியை திராவிட மொழிக்காரர்கள் ஏன் கற்றுக்கொள்ள வேண்டும்

(4-ம் பக்கம் பார்க்க)

கோவா 'சட்டமன்ற'த்தில் குமுறல்

போர்ச்சுகீசியருக்கு புத்தி புகட்டுமா?

கோவா கவர்னர்-ஜெனரல் ஆத்திரம்

பெல்காம், டிச. 27—

கோவாவில் ஆதிக்கம் புரியும் போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியவாதிகள், 'கோவாவிற்கு அரசியல் சுதந்திரம்' என்ற பெயரில் கண் துடைப்பு வேலையாக மேற்கொண்ட நடவடிக்கைகளும் அவர்களுக்கு இப்போது தொல்லையையும், எதிர்ப்பையும் தர முற்பட்டிருக்கின்றன. அதுகண்டு அவர்கள் சீற்றம்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கடந்த ஆகஸ்டுத் திங்களில் போர்ச்சுகல் ஆதிக்கபுரியினர் 'கோவா சட்ட மன்றம்' என்ற பெயரில் ஒரு மன்றத்தை நிறுவினர்.

22 உறுப்பினர் கொண்ட இந்த மன்றத்தில் 18 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுபவர்களாவர்; இவர்களில் 4 பேர்கள், கிராமப் பொருளாதார 'போர்டு'கள், மத நிறுவனங்கள் இவற்றின் பிரதிநிதிகள்; எஞ்சிய நான்கு பேர்களும், சர்க்காரின் பல இலாகாக்களைச் சேர்ந்த போர்ச்சுகீசிய அதிகாரிகள்—கவர்னர்-ஜெனரலால் நியமிக்கப்படுபவர்கள்.

இந்த மன்றம் நியமிக்கப்பட்டபோதே இதனை ஏற்கக் கோவா தேசியவாதிகள் மறுத்துவிட்டனர்.

போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை ஆதரிப்பவர்கள் என்று கருதப்படும் வட்டாரங்களிலேகூட, 'இது நாங்கள் விரும்பும் சுதந்திரமல்ல' என்ற குரல் எழுப்பப்பட்டது.

மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பல உறுப்பினர்கள், நிர்ப்பந்தமாகப் பதவி ஏற்குமாறு செய்யப்பட்டனர்.

இந்த இலட்சணத்தில் உள்ள சட்ட மன்றத்தின் அவசரக் கூட்டம் கடந்த கிழமைகளில் கூட்டப்பட்டது.

அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரான அமதேவ் பிராஜரீஸ் டி' கோஸ்டா என்பவர், 'உறுப்பினர்களுக்கு, வரவு-செலவுத் திட்டத்தை மாற்றி அமைக்கும் நோக்குடன் மசோதாக்கள் கொண்டுவருதற்கு அதிகாரம் வேண்டும்' என்றும், அதற்கொப்ப, கோவா 'சட்ட மன்ற'ப் பிரகடனம் திருத்தப்பட வேண்டும் என்றும் கோரி தீர்மானம் ஒன்று கொண்டுவந்தார் என்று கூறப்படுகிறது.

'இவர் எப்போதும் தம் பக்கம்' என்றெண்ணிக் கொண்டிருந்த போர்ச்சுகீசியருக்கு இவருடைய தீர்மானம் அதிர்ச்சியைத் தந்ததாம்.

இப்போதுள்ள கவலைதரும் பொருளாதார நிலையில், கோவா மக்கள் மீது வரிச்சுமையை அதிகரிப்பது கூடாது என்றும், ஏற்கனவே பெரும் அளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் இந்த வரிச்சுமையால் மேலும் அவதியுறுவார்கள் என்றும், கோவா கவர்னர்-ஜெனரலால் தயாரித்த வரவு-செலவுத் திட்டத்தை டி'சௌசா என்ற மற்றொரு உறுப்பினர் கண்டித்துப் பேசியிருக்கிறார்.

கோபமடைந்த போர்ச்சுகீசிய ஆதிக்கபுரியினர், 'கவலைப்படத் தகுந்த நிலை என்ன?'—என்று கேட்டபோது டி'சௌசா விளக்கம் தந்திருக்கிறார்.

இதையொட்டி எழுந்த பலத்த வாக்குவாதமும், டி'கோஸ்டாவின் தீர்மானமும் கோவா கவர்னர்-ஜெனரலுக்கு ஆத்திரமூட்டின என்பது ஆச்சரியத்திற்குரியதல்ல!

டி'கோஸ்டா தனது தீர்மானத்தைத் திரும்பப் பெறச் செய்வதற்காக அவர் நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறாராம்!

உடனே, அன்றையத்தினம் 'சட்ட மன்றம்' ஒத்திவைக்கப்பட்டதாம்.

தமது கைப்பாவையாகயிருக்கும் என்றெண்ணிய 'சட்ட மன்றம்' இன்று வேறு திசை திரும்புவது, போர்ச்சுகீசிய ஆதிபத்தியக்காரர்களுக்குப் புத்தி புகட்டுமா என்பது சந்தேகமே!

கோவாவில் இரகசிய இயக்கம்

'கொரில்லா'ப் போராட்டத்தில் ஈடுபடுவதாகத் தகவல்

பெல்காம், டிச 27—

'கோவா விடுதலை இராணுவம்' என்ற ஒரு இரகசிய இயக்கம் கோவாவிற்குள் இயங்குவதாயும், அது இப்போது 'கொரில்லா'ப் போரில் ஈடுபட்டிருப்பதாயும் இங்குள்ள கோவா தேசிய வட்டாரத்திற்குத் தகவல் கிடைத்திருக்கிறதாம்.

அந்த இரகசிய இயக்கத்தினர், அண்மையில் போர்ச்சுகீசியப் போலீஸ் நிலையம் ஒன்றைத் தாக்கி துப்பாக்கிகள், வெடிகுண்டுகள் முதலியனவற்றைக் கைப்பற்றியதுடன், இரண்டு போலீசாரையும் கொன்றதாகக் கூறப்படுகிறது.

மேலும், அந்த இயக்கத்தினர் இப்போது பாலங்களுக்கும், சர்க்கார் கட்டிடங்களுக்கும் தீ வைத்தல் போன்ற காரியங்களையும் தீவிரமாக மேற்கொண்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

'மத்திய சர்க்காரின் போக்கு ஏற்றத்தாழ்வுகளை விரிவாக்குகிறது'

'பொருளாதார நிபுணர்கள் முரண்பாட்டைச் சுட்டிக்காட்ட வேண்டும்'

பம்பாய் கவர்னர் கருத்து

பூனா, டிச. 26—

"வரையறை இல்லாத தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளினால் அபிவிருத்தி அடைந்ததும்—அபிவிருத்தி பெறாததுமான பிரதேசங்களிடையேயும், பணக்காரர்களிடையேயும்—ஏழைகளிடையேயும் நாட்டில் ஏற்றத் தாழ்வுகள் குறைவதற்கு மாறாக, மிகுந்துவருகின்றன.

"எனவே, பிரதேசங்களிடையேயும், வர்க்கங்களிடையேயும் இருக்கும் இந்த வேறுபாடுகளை மிக விரைவில் அகற்றுவதற்குப் பொருளாதார நிபுணர்கள் வழிகண்டாக வேண்டும்"

—என்று, பம்பாய் கவர்னர் மகதாப், 38-வது பொருளாதார மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"மத்திய சர்க்காரிடமிருந்து அபிவிருத்தித் திட்டங்களுக்காக மானியம் பெறும் விஷயத்தில், மாநிலங்களின் பொருளாதார நிலையைக் கணக்கெடுத்துக்கொள்ளாது, அவை எல்லாவற்றிற்கும் ஒரே விகிதத்தில் மானியம் வழங்கும் மத்திய சர்க்காரின் கொள்கை, முன்னேறிய மாநிலங்களுக்கும், பின்தள்ளப்பட்ட மாநிலங்களுக்குமிடையே ஏற்றத் தாழ்வுகளை அதிகரித்துவிட்டிருக்கிறது.

"அதேபோல, வருமானம் அதிகம் தராத வேலைகளில் பெரும்பகுதியினர் ஈடுபட வேண்டியதுமான நிலையை உருவாக்கிவைத்துவிட்டு ஏற்கனவே செழிப்பான வாழ்வு பெற்றிருப்போர் மேலும், வளமான வாழ்வுபெற வழி வகுத்திருப்பதும், ஏழைகளிடையேயும், பணக்காரர்களிடையேயும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை வளர்த்துவிட்டிருக்கிறது.

"கிராமங்களில், நகர்ப்புற வசதிகள் சிலவற்றைத் தர முயற்சிக்கும்போது, முரண்பட்ட வகையில், கிராமப் பொருளாதாரம் முன்னேறுவதற்கு வழி செய்யாமல், நகர்ப்புறத்தின் பொருளாதார வளப்பத்தை மிகுவிக்க வேகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

"இவையெல்லாம் நிலவிக்கொண்டிருக்கும் பெரும் முரண்பாடுகள். இவற்றைப் பொருளாதார நிபுணர்கள் ஆராய்ந்து திட்டமிடுபவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும்.

"ஒரு சோஷலிச மாதிரி சமூகத்தை நிறுவுவதே இலட்சியம் என்று வரையறுக்கப்பட்டிருக்கும்போது, அதன் பொருள், ஏற்றத் தாழ்வுகளை நீக்குவது மட்டுமல்ல; சாமான்ய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும்தான்."

தாராவி தி. மு. கழகத் தோழர்களுக்கு

★

"தமிழ் நாட்டில் ஏற்பட்டப் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் நல்லெண்ணத்தில், பம்பாய்—தாராவியில், 'சர்வ கட்சிப் புயல் நிவாரண நிதிக் குழு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தாராவியில் இயங்கி வரும் பல அரசியல் இயக்கங்களும், சமுதாய நிறுவனங்களும் இக்குழுவில் அங்கம் வகித்துப் பணியாற்றுகின்றன. தாராவி திராவிட முன்னேற்றக் கழகமும் சர்வ கட்சிப் புயல் நிவாரண நிதிக் குழுவில் அங்கம் வகித்து, முழுமூச்சுடன் புயல் நிவாரண நிதி வசூலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது.

"கடந்த 17, 18—12—55 ஆகிய இரு தினங்களிலும், தாராவிப் பகுதி நீக்ஷலாக, மகிம், மாதுங்கா, தாதர் ஆகிய பகுதிகளில் ரூ. 260 உண்டியல் மூலம் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

"சர்வ கட்சிப் புயல் நிவாரண நிதி வசூலின்போது கழகத் தோழர்களனைவரும் பெருவாரியான அளவில் கலந்து ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

"பம்பாய்—தாராவியைப் பொறுத்தவரையில் பல்வேறு பட்டக் குழுவினர் ஒரே இடத்தில் நிதி வசூல் செய்து அடையும் பலனைவிட, எல்லோரும் ஒன்றாக இணைந்து ஒரு குறிப்பிட்டப் பொதுக் காரியத்தில்—குறிப்பாகப் புயல் நிவாரணம் போன்ற நிதி திரட்டுவதில் அதிக பலன் அடைய முடியும். இக்கூட்டு முயற்சி, புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல பலனை அளிக்க ஏதுவாகும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு.

"ஆகவே, தாராவி தி. மு. கழக உறுப்பினர்களனைவரும், தவறாமல் சர்வ கட்சிப் புயல் நிவாரண நிதி வசூலில் பெருவாரியான அளவில் கலந்து, தங்கள் கடமையை நிறைவேற்றுவதுடன், தங்களாலியன்ற நிதி உதவியும், பொருளுதவியும் தந்து, நிதிக் குழுவிற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, பம்பாய்—தாராவி தி. மு. கழகச் செயலாளர் தோழர் சி. த. மு இ. ஆரியசங்காரன் கேட்டுக்கொள்கிறார்.

பம்பாய் மாவட்ட தி. மு. க. கிளைகளுக்கு

"தலைமை நிலையத்திலிருந்து வரப்பெற்ற உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள், கிளைகளனைத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஆமதாபாத்திலுள்ள கிளைக் கழகத் தோழர்கள், நகரக் கிளைச் செயலாளர் தோழர் இரா. தணிகாசலம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

"பம்பாய்—ஆமதாபாத் கிளைகள் டிசம்பர் '55, சனவரி '56 ஆகிய இரு திங்களிலும் உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் ஈடுபட வேண்டுவதோடு, இதற்கிடையே எந்தக் கிளையும் தேர்தல் நடத்தக்கூடாது என்பதையும் நினைவிலிறுத்த வேண்டுகின்றேன்.

"நமது கழகத்தின் கொள்கை, கோட்பாடுகளை — நாம் கோரும் திராவிடம் பிரிய வேண்டியதன் அவசியத்தை வடநாட்டில் வாழுகின்ற பிற மாநிலத்தவர், பிற நாட்டினர் எல்லாம அறியும்வண்ணம விளக்குகின்ற மகத்தான பொறுப்பு பம்பாய் தி. மு. கழகத்தைச் சார்ந்ததாகும். இம்மகத்தான பணியிலீடுபட கிளைக் கழகங்களெல்லாம் அதிகப்படியான உறுப்பினர்களைச் சேர்த்து, சிறப்புற இயங்க வேண்டும். இதனை ஒவ்வொரு கிளைச் செயலாளர்களும, பொறுப்புள்ள நண்பர்களும் மனதிற்கொண்டு, இவ்வாண்டு மேலும அதிகப்படியான உறுப்பினர்களைச் சேர்த்திடும் பணியில் ஈடுபட வேண்டுகிறேன்.

'இடையே குறுகிய காலமே உள்ளமையால், தோழர்களனைவரும் ஆங்காங்கே இப்பணியில் தீவிரமாக ஈடுபடக் கேட்டுக்கொள்கிறேன். அனுப்பிக் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத் தாள் போதாதென்றால் உடனடியாக எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்,"

என்று, பம்பாய் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அறிவிக்கிறார்

சென்னை மாவட்டக் கிளைக் கழகங்களுக்கு

"உறுப்பினர் பதிவுத் தாள்களைப் பெற்றுக்கொண்ட கிளைக் கழகங்கள் உறுப்பினர் சேர்ப்பதில் தீவிரமாக ஈடுபடவும், கழகச் சார்புடைய கலையகங்கள், நூலகங்கள், மன்றங்கள், இன்ன பிறவற்றுடன் உறுப்பினர் சேர்ப்பதில் தொடர்புகொள்ளவும், மிக விரைவாகவும், உறுப்பினர் பதிவுத் தாள்கள் நிறைவாகவுமான பணியில் உடனே இறங்கவும், பதிவுத் தாள்கள் முடிவுற்றதும், உரிய பங்கினை எடுத்துக்கொண்டு, மீதித் தொகையினைத் தலைமை நிலையத்தில் உடனடியாகக் கட்டிவிடவும் வேண்டுகிறேன்.

"மேலும் உறுப்பினர் சேர்க்க வேண்டின், முடிவுற்றப் பதிவுத் தாள்களையும், அதற்குரிய தொகையில் கிளைக்குப்போக மீதமுள்ளதையும சேர்ப்பித்தப் பிறகே உறுப்பினர் பதிவுத் தாள்கள் மீண்டும் கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்,"

என்று, சென்னை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

கோவை மாவட்டத் தி. மு. க. கிளைகளுக்கு

"11—12—55-ல், ஈரோட்டில் நடைபெற்ற மாவட்டக் குழுக் கூட்டத்தில், கூடுமானவரை கிளைக் கழகங்களுக்கு உறுப்பினர் பதிவுத் தாள்கள் தரப்பட்டன. மேலும் அஞ்சல் மூலமும் அநேகக் கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பதிவுச் சீட்டுக்கள் பெறாத கிளைகள் தங்களுக்கு வேண்டிய அளவு தாள்களை, ஈரோடு மாவட்டக் கழக அலுவலகத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன். பதிவுத் தாள்கள் பெற்றுக்கொண்ட கிளைகளும் மேலும் தங்களுக்கு வேண்டிய அளவு சீட்டுக்களை ஈரோடு மாவட்டக் கழக அலுவலகத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். எல்லா கிளைக் கழகத் தோழர்களும் முழு மூச்சுடன் முயற்சி எடுத்து, பெரும் அளவில் உறுப்பினர் எண்ணிக்கை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, கோவை மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் வி. சண்முகநாதன் அறிவிக்கிறார்.

நாட்டில் 40 இலட்சம் பிச்சைக்காரர்கள்?

'திட்டவட்டமாகப் புள்ளி விவரம் தெரியாவிட்டாலும், நாட்டில் சுமார் 30 முதல் 40 இலட்சம் பேர் பிச்சை எடுப்பதைத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்,"

என்று, இந்திய சமூக சேவை மாநாட்டில் தலைமையுரை ஆற்றுகையில், திருமதி அன்சா மேத்தா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் எவ்வளவு?

'நகரில் சுமார் 7,500 பிச்சைக்காரர்கள் இருக்கின்றனர்; இதில் 12 வயதிற்கும் குறைந்தவர்கள் சுமார் 2,000 பேர்; 12 வயது முதல் 20 வயதுவரை உள்ளவர் சுமார் 742 பேர் இருக்கின்றனர்,"

என்று, சென்னை நகரசபை கமிஷனர் வி. என் சுப்பராயன் அவர்கள், அனாதைச் சிறுவர்கள் தொழில் கற்கும் விடுதித் துவக்க விழாவின்போது குறிப்பிட்டுள்ளார்

அனாதைச் சிறுவர்களை ஆதரிக்க முயற்சி

சென்னை, டிச. 27—

சென்னை நகரிலுள்ள அனாதைச் சிறுவர்களை, அவர்கள் கையாண்டு வரும் இழிவான நடைமுறைச் செயல்களிலிருந்து மீட்டு, ஏதாவதொரு தொழிலை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும்நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அனாதைச் சிறுவர்களின் தொழில் கற்கும் விடுதியை மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் நேற்று திறந்துவைத்தார்.

ரூ 2 இலட்சம் செலவில் நிறுவப்படும் இவ்விடுதியில், சுமார் 500 அனாதைச் சிறுவர்கள் இடம் பெறுவர்.

இத்திட்டம் பற்றிக் குறிப்பிடுகையில், சென்னை நகரசபைக் கமிஷனர் சொன்னார்:—

"சிறுவர்களுக்குப் பயிற்சி அளித்து, உடலுழைப்பு மூலம் ஏதாவது ஒரு தொழிலை அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதே இதன் நோக்கமாகும்; வயதிற்கும்—உடல் நலத்திற்கும் தகுந்தவாறு வேலை தரப்படும்; 12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுத் தரப்படும்; ஊதியம் பெற்று, தொழிலில் நன்கு பயிற்சி பெற அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும்; புத்திசாலித்தனமான குழந்தைகளுக்குக் கல்வி வசதியளிக்கப்படும். இந்த நடைமுறைத் திட்டம் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடாதவாறு தடுப்பதற்கு ஏதுவாகும்."

வேண்டுகோள்

"நெல்லை மாவட்டம், ஆறுமுகனேரி தி. மு. கழகக் கிளை மாவட்டப் பிரதிநிதி தோழர் த. இரத்தினம் அவர்கள், 13—12—55-ல், நெல்லை சென்று வருவதாகக் கூறிச் சென்றார். நாளது தேதி வரை அவர் இங்கு வரவில்லை. பல இடங்களில் தேடியும் அவர் இருக்குமிடம் தெரியவில்லை அவர் மாநிறம்; உயரம் சுமார் 5 அடி 3 அங்.; வயது 25; தையல் தொழிலாளி; வலது கையில் கத்திரி பிடித்தக் காய்ப்பு இருக்கும். இந்த அடையாளம் கொண்ட அவர் இருக்கும் இடம் அறிந்து, அன்பர்கள் எனக்கு உடனே எழுதித் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்," என்று ஆறுமுகனேரி கிளைக் கழகச் செயலாளர் தோழர் ச. கெ. ஆதித்தன் வேண்டுகிறார்.

புயல் நிதி திரட்டுவதில் தோழர்கள் முயற்சி

★

சென்னை 37-வது வட்ட தி. மு. கழகம்

10—12—55ல், மேற்படி வட்ட கழகச் சார்பில் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையில் புயல் நிவாரண நிதிக் குழுத் தோழர்கள் தெருத் தெருவாகச் சென்று ரூ. 60 வசூல் செய்து மாவட்டக் கழகத்தவரிடம் ஒப்படைத்தனர்.

பொன்மலை—மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. க.

புயல் நிவாரண நிதிக்கென, தி. மு. கழகத்தின் சார்பில் ரூ. 40 பொது மக்களிடம் நன்கொடையாக வசூலிக்கப்பட்டு, சென் சர்க்கார் புயல் நிவாரண நிதி இலாகாவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

துறையூரில் நிதியளிப்புக் கூட்டம்

11—12—55ல், துறையூர் நகர தி. மு. கழகச் சார்பில், நகராண்மைக் கழகத் துணைத் தலைவர் பெருமாள் தலைமையில் புயல் நிதி அளிப்புக்கென சர்வ கட்சிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர்கள் கவியபெருமாள், சண்முகம் (தி. மு. க.) இராமகிருஷ்ணன், கருப்பையா (காங்கிரஸ்) கிருஷ்ணமூர்த்தி, மருதை (சோஷ) சுந்தரம், கோவிந்தன் (கம்யூ.) முத்து, பெருமாள் ஆகியோர் கொண்ட புயல் வெள்ள நிவாரணக் குழு அமைத்து நகரில் தெருக்கள் தோறும் சென்று தானியங்கள், துணிமணிகள் முதலியன வசூல் செய்யப்பட்டன.

23—12—55ல், பாரத் தியேட்டரில் தோழர் எ. வி. அரங்கசாமி தலைமையில் நடைபெற்ற நிதி அளிப்புக் கூட்டத்தில், நிவாரணக் குழுத் தலைவரால் ரூ. 804-ம், 88 மூட்டை தானியங்களும், ரூ. 2,000 மதிப்புள்ள துணிகளும் அளிக்கப்பட்டன.

நிதியளிப்புக் கூட்டத்தில் தோழர்கள் அழகமுத்து, மாவட்டச் செயலாளர் அம்பில் தர்மலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மதுரை ஓட்டல் தொழிலாளர்கள்

மதுரை டவுன் ஹால் ரோடு, லண்டன் ஓட்டல் தொழிலாளர்களிடம், ஓட்டல் நிர்வாகி இ. சைபதம், தோழர் ஞா. தியாகஅரசம் ரூ 42—2—0 வசூலித்து, புயல் நிவாரணநிதிக்குஅனுப்பியுள்ளனர்.

திருநாகேசுவம்

குடந்தை வட்டம் திருநாகேசுவரம் தி. மு. கழகத் தோழர்களும், வள்ளுவர் கழகத் தோழர்களும் ஒன்றுகூடித் தங்கள் பகுதி மக்களிடமிருந்து ரொக்க ரூ. 140-ம், $61\frac{1}{2}$ மரக்கால் அரிசியும், 18 மரக்கால் கடலையும், ரூ. 50-க்கு மேற்பட்ட மதிப்புடைய கைத்தறித் துணிகளும் திரட்டி அனுப்பியுள்ளனர்.

திருநீலகண்டபுரம் (நீலங்களாகுப்பம்)

திருவான்மியூருக்குத் தென் பகுதியிலுள்ள திருநீலகண்டபுரம் மக்கள் முன்னேற்றக் கழகத்தவர், தங்கள் பகுதி பொதுமக்களிடம் திரட்டிய ரூ. 5—2—3-ம், திருவான்மியூர் புயல் வெள்ள நிவாரண நிதிக் குழுவினர் மூலமாக தி மு. கழகத் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர்—பெற்றுக்கொண்டோம்.

—தி. மு. க. தலைமை நிலையம்

திருமணம்

ஆறுமுகனேரி தோழர் எம். கே. தனிக்கோடி—தோழியர் பரமேஸ்வரி அம்மைக்கும், தோழர் எஸ். புவநீதபெருமாள்—தோழியர் செல்வத்தாய் அம்மைக்கும் நடந்த திருமணங்களின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு முறையே ரூ. 1, 1-ம் ஆக ரூ. 2-ம் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

கைவிடப்பட்ட மனைவியர் பராமரிப்பிற்கு....

ஓடிவிட்ட கணவர்கள் பணம் தரவேண்டும்

லண்டன், டிச. 25—

ஓடிப்போய்விட்ட கணவன்மார்கள், கைவிடப்பட்ட தங்களுடைய மனைவிமார்களின் பராமரிப்பிற்குப் பணம் தரச் செய்வதற்காகத் தொழிற் கட்சியைச் சேர்ந்த இரண்டு மக்கள்சபை உறுப்பினர்கள் சட்டம் ஒன்று கொண்டுவர முயற்சித்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இப்போது, வரி செலுத்துவோரெல்லோருமாகச் சேர்ந்து 35 இலட்சம் பவுன் (ரூ. 4.6 கோடி) வரை, ஆண்டுதோறும் சுமார் 40,000 கைவிடப்பட்ட மனைவியரின் பராமரிப்பிற்காகத் தந்து வருகின்றனர்.

மணமான பெண்கள் சங்கத்தின் ஆதரவு பெற்றுள்ள அந்தத் தொழிற்கட்சி உறுப்பினர்கள், ஓடிவிட்ட கணவன்மார்களின் சம்பளத்திலிருந்து ஒரு கணிசமான தொகையைத் தகைளது மனைவியரின் பராமரிப்பிற்காக சர்க்காரே பிடித்துக்கொள்ள வேண்டும் என்று கருதுகின்றனர்.

ரூ. 20 லட்சம் செலவில் கூட்டுறவுத் தொழிற்சாலைகள்

தென் மாநில அதிகாரிகள் மாநாட்டில் தீர்மானம்

சென்னை, ஆந்திரா, திரு-கொச்சி, மைசூர் ஆகிய மாநிலங்களின் தென்பகுதி கைத் தொழில் தேவைகளைக் குறித்து விவாதிப்பதற்காக மத்திய வர்த்தக இலாகா அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி தலைமையில் நடைபெற்ற அதிகாரிகள் மாநாட்டில், ரூ 20 இலட்சம் செலவில் நான்கு கூட்டுறவுத் தொழிற்சாலைகள் துவங்குவதென்று முடிவு செய்யப்பட்டதாம்.

திண்டுக்கல்லில் ரூ. 4 இலட்சம் செலவில் பூட்டு உற்பத்தித் தொழிற்சாலையும், சென்னை ஒற்றைவாடையில் ரூ $6\frac{1}{2}$ இலட்சம் செலவில் உலோகத் தகடு உற்பத்தித் தொழிற்சாலையும், பெரம்பூரில் ரூ 6,75 000 செலவில் தோல்—செருப்பு தயாரிக்கும் தொழிற்சாலையும், மலபார் மாவட்டம் பாப்பினிசேரியில் ரூ 3 3 இலட்சம் செலவில் பீங்கான் தொழிற்சாலையும் ஆரம்பிப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவற்றைத் தவிர, வடஆற்காடு, இராசபாளையம் ஆகிய மாவட்டங்களில், ரூ. 9 இலட்சம் செலவில் இரண்டு எஞ்சினீயரிங் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படுமாம்.

சேலம் மாவட்டம் மேட்டூரில், ரூ 5.8 இலட்சம் செலவில், துருப்பிடிக்காமல் தடுப்பதற்காக இரும்பின்மீது துத்தநாகம் பூசும் 'கால்வனைசிங்' என்ற இயந்திரத் தொழிற்சாலை ஏற்படுத்தக்கூடுமாம்.

துவக்கத்தில் இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் சர்க்காரால் நிர்வகிக்கப்பட்டு, பின்னர், பங்குதாரர்களிடமே ஒப்படைக்கப்படும்; இத்தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்கள்தான் அவற்றின் பங்குதாரர்கள்—எல்லா இலாபங்களும் அவர்களுக்குத் தரப்படும்.

மொத்தச் செலவில் முக்கால் பாகத்தை $2\frac{1}{2}$ சதவிகித வட்டியில் மத்திய சர்க்கார் கடனாகக் கொடுப்பதுடன் தொழிற்சாலைகள் மேற்பார்வைக்கான செலவில் பாதியையும் ஏற்றுக்கொள்வார்களாம்

புதிய சோஷலிஸ்டுகளின் தலையாய இலட்சியம்!

தொழிலாள விவசாய மக்களை இயக்கத்துள் அணைப்பதுதானும்

டாக்டர் லோகியா விளக்கம்

ஐதராபாத், டிச. 28—

"சோஷலிச இயக்கத்தின் அரவணைப்பிற்குள், இந்தியாவில் உள்ள தொழிலாளி வர்க்கத்தையும், விவசாயப் பெருமக்களையும் கொண்டுவருவதே புதிய கட்சியின் தலையாய நோக்கம்,"

என்று, டாக்டர் ராம் மனோகர் லோகியா அகில இந்திய சோஷலிஸ்டுக் கட்சியின் துவக்க மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறியதாவது :—

"சோஷலிச இயக்கத்திற்கு முதல் எதிரிகள் அதன் அணியிலேயே இருக்கின்றனர்.

"இந்தியாவில் சோஷலிச இயக்கம், கீழ்த்தர மத்திய வர்க்கத்தினரிடையேதான் பெரும்பாலும் உருவாக்கி வளர்க்கப்பட்டது.

"விவசாய, தொழிலாள வர்க்கத்தவருக்கு, சோஷலிச இயக்கத்தின் தலைமையில், தலை முதல் கால்வரை எந்த விதப் பங்கும் இருக்கவில்லை. யார் சரித்திரம் சமைக்க வேண்டியவர்களோ அவர்கள் இயக்கத்தில் இல்லை; இயக்கத்திற்கு வெளியே இருக்கிறார்கள்.

"கூட்டு வாழ்க்கை எனும் அணைப்பில் அவர்களை ஒன்று திரட்டுவதுதான் புதிய சோஷலிஸ்டுக்கட்சியின் தலையாய நோக்கமாயிருக்கும்.

மக்களிடையே — குறிப்பாக, நிலமில்லாத விவசாயிகள், தொழிலாளர்கள், பெண்கள் ஆகியோர் இதுவரை இந்திய அரசியலால் புறக்கணிக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களிடத்திலே புகுந்து வேலை செய்வதே சோஷலிஸ்டுக் கட்சியின் வேலை முறையாக இருக்கவேண்டும்.

'உயர்ந்திருப்போரிடத்தில் கோபங் கொள்ளுவதும், அதேபோது அடித்தளத்திலிருப்போரிடமிருந்து விலகி நிற்பதும் சோஷலிசமாகாது.

"சுரண்டலுக்கு எதிராக, ஆத்திரமும், அனுதாபமும் ஒன்று கூடுவதுதான் உண்மையான சோஷலிஸ்டுகளை உருவாக்கும்."

புதிய திட்டங்களுக்கோ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"தனித்தனி விஞ்ஞானிகளின் அரவணைப்பிற்கு இந்த அரசாங்கம் தன்னை ஆளாக்கிக்கொண்டிருக்கிறது; ஆனால், விஞ்ஞானமோ, பலரின் உழைத் திறத்தால் உருவாகுவதாகும். எனவே, விஞ்ஞானிகள் அலட்சியப்படுத்தப்படுவதால் ஏற்படக்கூடிய கேடு, தவிர்க்கக்கூடிய காலத்தைக் கடப்பதற்கு முன் செம்மைப்படுத்தப்படும் எனக் கொள்வதற்குமில்லை."

—இக்கருத்துக்களை, தேசிய விஞ்ஞானக் கழகத்தின் வெள்ளி விழாவில் பேசிய விஞ்ஞானப் பேராசிரியர் மேகநாத் ஷா கூறியுள்ளார்.

விழா, உத்திரப் பிரதேச முதல் அமைச்சர் சம்பூர்ணனந்த் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்தியப் பேரரசும், மாகாண அரசாங்கங்களும், விஞ்ஞானக் கழகங்களை அலட்சியப்படுத்தி வருவதாகவும், தாங்கள் மேற்கொண்டுள்ள பணிகளின் தன்மை தெரியாதவர்களிடம் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டு இருப்பதாகவும் பேராசிரியர் கண்டித்துக் கூறினார்.

பஞ்சாயத்து சபைத் தேர்தல்கள்

பொதுத் தேர்தல் முடியும்வரை ஒத்திவைப்பு

1952-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 'ஸ்தல ஸ்தாபன'ங்களுக்குத் தேர்தல் நடத்தி வருவதினால் ஏற்பட்டு வரும் கஷ்டத்தைக் குறைப்பதற்காக, பஞ்சாயத்துப் போர்டுகளுக்கு இந்த ஆண்டு நடைபெற வேண்டிய தேர்தலை அடுத்துவரும் பொதுத் தேர்தல் வரை ஒத்திப் போடுவது என்று சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இதை ஒட்டி சர்க்கார், 'இப்போது உள்ள பல்வேறு பஞ்சாயத்து உறுப்பினர்களின் மூன்றாண்டுப் பதவிக் காலம் வரும் 1956 ஜனவரி 2-ந் தேதி முதல், 1958 ஜனவரி 2-ந் தேதிகளுள் முடிந்துவிடும் என்பதை பதவி துவங்கிய நாளிலிருந்து ஐந்தாண்டுக் காலம் வரை நீடிக்கும்' என்று உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கின்றனராம்.

இந்த உத்தரவிலிருந்து முத்துப்பேட்டை பஞ்சாயத்திற்கு மட்டும் விலக்களிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

சென்னை நகரில் திருமதி சன்-யாட்-சென்

சென்னை, டிச. 28—

சீனக் குடியரசின் துணைத் தலைவியான திருமதி (சன்-யாட்-சென்) சூங்-சிங்-லிங் இன்று காலை, கல்கத்தாவிலிருந்து விமான மூலம் சென்னை வந்து சேர்ந்தார்.

சென்னையில் இரண்டு நாள் நல்லெண்ணச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், விமான நிலையத்தில், கவர்னர், மற்றும் பெண்கள் நிறுவனப் பிரதிநிதிகள், ஏராளமான பள்ளிப் பெண்கள், மற்றும் உயர்தர அதிகாரிகள் முதலியோரால் வரவேற்கப்பட்டார்.

விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு வளைவுகள் — வாழ்த்துரைகள் வாசகங்கள் பொறிக்கப்பட்டு அமைக்கப்பட்டிருந்தன.

கவர்னர் மாளிகையில் தங்கும் அவர், இரண்டொரு சமூக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுவிட்டு, 30-ந் தேதி காலை பெங்களூருக்குச் செல்வார்.

மருத்துவத் துறையில் ரஷ்யாவின் சாதனை

கொடிய நோய்கள் குணமாக புதியமுறைகள்பிரயோகமாம்

மருத்துவத் துறையில் ரஷ்யா வெகுவாக முன்னேற்றமடைந்துள்ளதாம்.

க்ஷயரோகம் போன்ற பல கொடிய நோய்களைக் குணப்படுத்துவதில் வெற்றி ஏற்பட்டுள்ளதென்றும், மற்றும் பல நோய்களைத் தீர்ப்பதில் ரேடியக் கிளர்ச்சியுள்ள ஐசடோப்புகள் உபயோகம் அதிகரித்துள்ளதென்றும் கூறப்பட்டுள்ளது.

இருதய இரணச் சிகிச்சை, நரம்பு சம்பந்தமான வியாதிகள் ஆகியவற்றைக் குணப்படுத்துவதிலும் சோவியத் டாக்டர்கள் புதிய முறைகளைக் கையாளுகின்றனராம்!

'கட்சி அரசியலில் ஈடுபட மாட்டேன்'

ம.சோ. கட்சி மாநாட்டில் அரசியல் துறவு பூண்ட ஜெயப்பிரகாஷ்

கயா, டிச. 27—

"இந்தியாவில் சோஷலிசம் அமுலாகும்; நானே அதை அமுல் செய்வேன்'—என்று இரண்டு நாட்களுக்கு முன்பு குரல் ஒன்று கேட்டேன்; மக்களிடையே இந்தத் தவறான நம்பிக்கையை ஊட்டாதீர்கள்; நீங்களும் இந்தப் பிரமையில் காலந் தள்ள வேண்டாம்.

"சோஷலிசம் இந்தியாவில் நடைமுறைக்கு வரும்; ஆனால், என்னால் அல்ல; ஏனென்றால், சோஷலிசத்தை வரவழைக்க என்னிடம் ஒன்றும் மந்திரக்கோல் இல்லை.

"நான் தீவிர அரசியலில் பங்கு கொள்வேன் என்று நீங்கள் இன்னும் நம்பிக் கொண்டிருந்தால் நீங்கள் கட்சிக்குத் தீங்கிழைத்தவர்கள் ஆவீர்கள்.

"ம. சோ. கட்சியில் ஏற்பட்ட கோஷ்டிச் சண்டையினால் தான், நான் 'பூதான இயக்க'த்திற்குச் சென்றேன் என்று கூறுவதும் தவறு; நான், சுயமான முடிவின் பேரில்தான், பூமி தான இயக்கத்தில் ஈடுபட்டேன்.

"அரசியலில் நான் தீவிரப் பங்கேற்கமாட்டேன் என்பதை நீங்கள் உணரவேண்டும்; எப்போதாவது இம்மாதிரி மாநாடுகளுக்கு வருகிறேன்; ஆனால், நான் தவறுகள் செய்துவிட்டதாக உணருகிறேன். எனது எதிர்காலம் என்னவாயிருக்கும் என்று எனக்குத் தெரியாது; ஆனால், என்னைப் பற்றித் தவறான நம்பிக்கைகளை மக்களிடத்தில் தயவுசெய்து ஊட்டாதீர்கள்.

"அரசியல் என்பது, ஒரு மனிதனின் வாழ்க்கையின் பிரிக்க முடியாத பகுதி—என்று சில நண்பர்கள் எனக்கு அறிவுரை பகன்றார்கள்; அவர்கள் கூறுவதில் உள்ள அம்சங்கள் எனக்குப் புரியத்தான் செய்கின்றன.

"நான் ஒருபோதும் அரசியலில் பங்கு பெறவே மாட்டேன் என்று கூறியதில்லை; நான் கூறியது எல்லாம், 'பொதுவாக அரசியல் உணரப்படும் முறையில்—பொருளில், நான் அரசியலில் ஈடுபாடு கொள்ளமாட்டேன்' என்பதுதான்.

"நான் அதிகார அரசியல்—கட்சி அரசியலிலிருந்து விலகிக்கொள்ள முடிவெடுத்து விட்டேன்."

என்று, தோழர் ஜெயப்பிரகாஷ் நாராயண், இங்கு நடைபெறும் ம. சோ. கட்சி மாநாட்டுப் பிரதிநிதிகளிடைப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சூடானின் சுதந்திரக் கொடி

சுதந்திரச் சூடானின் புதிய மூவர்ணக் கொடி தயாராகி விட்டதாகக் கூறப்படுகிறது.

நீலநைல் நதியைக் குறிக்க நீலமும், வெள்ளை நைல் நதியைக் குறிக்க வெள்ளையும், சூடானின் அடிப்படைத் தொழிலான விவசாயத்தைக் குறிக்கப் பச்சை நிறமும் கொண்டு சூடான் சுதந்திரக் கொடி பறக்கும் என்று தெரிய வருகிறது.

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. கிளைகளுக்கு

★

"நமது மாவட்டச் சுற்றுப் பயணத்திற்காக ஜனவரித் திங்கள் கடைசி வாரத்தில் அண்ணா அவர்களும், தோழர்கள் ஏ.வி.பி.ஆசைத்தம்பி, எம். எஸ். இராமசாமி ஆகியோரும் வர ஒப்புதல் தந்திருக்கிறார்கள்.

'கூட்டம் நடத்த விரும்பும் கிளைக் கழகச் செயலாளர்கள் உடனடியாக மாவட்டக் கழகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்,"

என்று, இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் அறிவிக்கிறார்.

பம்பாய் மாவட்டத் தி. மு. கழக (கிளை)ச் செயலாளர்கட்கு

★

"1—1—56 பிற்பகல் 2மணி அளவில், பம்பாய் தாராவி திராவிடரகத்தில், பம்பாய் மாவட்டக் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். தோழர் கண்ணதாசன் அவர்களது பம்பாய் சுற்றுப்பயண விவரம் குறித்து முடிவு செய்யப்படும். எல்லா கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டக் கழக உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்."

ஃ ஃ ஃ

"தமிழகத்தில் ஏற்பட்டப் புயல், வெள்ளத்தையொட்டியும், வேறு சில அலுவல்களையிட்டும் தோழர் கண்ணதாசன் கேட்டுக்கொண்டதற்கிணங்க, டிசம்பர் 24 முதல் 1956 சனவரி 1-ந் தேதி வரை நடைபெற விருந்த பம்பாய்-ஆமதாபாத் நிகழ்ச்சிகள் கைவிடப்பட்டு 1956 சனவரித் திங்கள் இரண்டாவது வாரம் முதல் (பொங்கல் விழா வாரத்தில்) தவறாது நடைபெறும். புதிய நிகழ்ச்சி நிரல் விவரம் பின்னர் வெளிவரும்,"

என்று, பம்பாய் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அறிவிக்கிறார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

30—12—55 மாலை 6 மணிக்கு சென்னை - முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றத்தில் தோழர் மு. பெருமான் தலைமையில் நடைபெறும். 'கலையும் - வாழ்வும்' எனும் பொருள் பற்றி மன்றத் தோழர்கள் பலர் பேசுவா

இடமாற்றம்

மயிலை 44-வது வட்ட தி. மு. கழகம், எண் 2/1, காரணீசுவரர் கோவில் தெரு, மயிலாப்பூர், சென்னை-4,

பச்சைத் தமிழன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைசூர் பிரீமியர் மெட்டல் தொழிற்சாலை, இந்துஸ்தான் ரோலிங் தொழிற்சாலை நிர்வாகிகளின் சட்ட விரோதமான கதவடைப்புக் குறித்தும், அதனால் கடந்த மூன்றரை மாத காலமாக அவதியுறும் தொழிலாளரின் நியாயமான கோரிக்கை குறித்தும், காங்கிரஸ் சர்க்காரின் 'சோஷலிச மாதிரி'ப் போக்கு குறித்தும், தொழிலாளர் நடத்தும் போராட்டம் குறித்தும் நேற்று இங்கு செய்தி வெளியிட்டிருந்தோம்.

இரண்டாவது நாளாக இன்று காலை 7-மணி முதல் எஸ்.விநாயகம் என்ற தொழிலாளத் தோழர், தங்கசாலையில் உள்ள ஆலையின் விற்பனை அலுவலகத்தின் முன்பாகப் பட்டினிப் போரைத் துவக்கியுள்ளார்.

காலை 11-மணிக்கு தோழர் ஏழுமலை தலைமையில் ஏழு தொழிலாளர்கள் மறியலைத் துவக்கினர்கள்.

அவர்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

பின்னர் மாலை 3—மணிக்கு தோழர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஆறு தொழிலாளர்கள் தொடர்ந்து மறியலை நடத்தினர். அவர்களையும் போலீசார் கைது செய்து காவலில் வைத்தனர்.

நேற்றுக் கைதான 12 தொழிலாளர்களுக்கும் இன்று நகரப் போலீஸ் நீதி மன்றத்தில் ஒரு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் கட்ட மறுத்த அவர்களை ஆறு மணி நேரம் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்திரவிட்டாராம்.

தொடர்ந்து தொழிலாளர்கள் போராடுவதற்கு உறுதி பூண்டிருக்கிறார்கள்.

அந்த விளம்பரம்

சென்னை லேவாதேவி மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக, சேலம் மூல்தானி பாங்கர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாயிருப்போர் அனைவரும் தங்கள் கடைகளை 1955 டிசம்பர் 28, 29-ந் தேதிகளில் மூடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாக, அந்த சங்கத்தின் செயலாளர், பத்திரிகைகளில் விளம்பரம் ஒன்று தந்திருக்கிறார்.

எப்படியிருக்கிறது பார்த்தீர்களா வடநாட்டவரின் அந்த விளம்பரம்?

ஆரியரும்-திராவிடரும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

—என்று வாதிடப்படுகிறது; உண்மைதான். சமஸ்கிருதமொழி ஆரிய மொழிதான்; கன்னடம் திராவிட மொழிதான்; ஆனால், இன்று ஆரியரும்—திராவிடரும் பிரித்துப்பார்க்க முடியாதபடி கலந்துவிட்டார்கள் — ஒன்றாகிவிட்டார்கள்; எனவே, சுதந்திர இந்தியாவில் இலக்கிய ஆசை கொண்ட எவரும், சமஸ்கிருதமொழி அறிவு பெற்றவர்களாக விளங்கவேண்டும்,"

என்று, அத்திய ரங்காச்சாரியா என்ற பிரபல கன்னட எழுத்தாளர், 38-வது கன்னட சாகித்ய சம்மேளனத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.